# புதுவைப் பல்கலைக்கழகம்
## தோட்டக்கலைத் துறை
ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 605 014.


**PU/Hort/F. Coco usu. auc./2016-17/** **Dated: 12.07.2016**

## ஏல அறிவிப்பு

புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள **591 தென்னை மரங்களின்** பலன்களை இருக்கின்ற நிலையில் (as is where as condition) ஆகஸ்ட் மாதம், 2016 முதல் ஜீலை மாதம், 2018 வரையில் அனுபவித்துக்கொள்ள, ஏலத்தில் எடுப்பதற்காக www.auctionindia.com என்கிற இணையதளம் மூலம், **28.07.2016, வியாழக்கிழமை** அன்று **காலை 10.00 மணிக்கு** ஆரம்பித்து **மதியம் 01.00 மணிவரை** பொது ஏலம் விட இருக்கிறது.

விண்ணப்பப் படிவங்களை, பல்கலைக்கழக இணையதளம் (**www.pondiuni.edu.in**)-ல் பதிவிறக்கம் (download) செய்து பெற்றுக்கொள்ளலாம். புதுவைப் பல்கலைக்கழக இணையதளத்தின் மூலமாக பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் விண்ணப்பத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகைக்கான வரைவோலையை (D.D.) இணைத்து அனுப்ப வேண்டும்.

ஏலத்திற்கான விதிமுறைகள் மற்றும் இதர விபரங்களை பல்கலைக்கழக இணையதளத்தின் (**www.pondiuni.edu.in**) மூலமாக அறிந்துகொள்ளலாம்.

**முக்கிய தேதிகள்:**

i. ஏலத்தேதி : 28.07.2016 காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை

ii. விண்ணப்பிக்க கடைசி நாள் : 27.07.2016 மாலை 05.30 மணி வரை

**இடம் :** ஆர்.வி. நகர்
**தேதி :** 12.07.2016

**பதிவாளர்**
**புதுவைப் பல்கலைக்கழகம்**

# புதுவைப் பல்கலைக்கழகம்

## தோட்டக்கலைத் துறை

**ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 14.**

---

**ஏல விண்ணப்பம்**

**விண்ணப்ப எண்:**__________ **தேதி:** ____________

புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள **தென்னை மரங்களின்** பலன்களை இரண்டு ஆண்டுகளுக்கு வரையிலான பருவத்தில் அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கான டெண்டர் விண்ணப்பப் படிவம்.

**I.** ஏலத்திற்கான மொத்த தென்னை மரங்கள் : 591
**II.** குத்தகை காலம் : ஆகஸ்ட் மாதம், 2016 முதல் ஜீலை மாதம், 2018

1. விண்ணப்பதாரர் பெயர் -
2. தந்தையின் பெயர் -
3. முழு முகவரி மற்றும் தொலைபேசி/கைபேசி எண் -
4. பல்கலைக்கழகத்திற்கு செலுத்தவேண்டிய உரிமத் தொகை பாக்கி இருந்தால் அதன் விபரம் குறிப்பிடவும் -
5. ஏலதாரரின் காப்பீட்டுத்தொகை - **ரூ.5,000/=**
6. காப்பீட்டுத் தொகை (EMD) D.D. எண் & தேதி -
7. ஏலத்தின் ஆரம்ப தொகை - **ரூ.49,550/=**
8. ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **ரூ.100/= -க்குமேல்** இருக்ககவேண்டும் என்பதை அறியவும் (உதாரணம்: ரூ.49,650/=, ரூ.49,750/=, ரூ.49,850/=, ரூ.49,950/=, ரூ.50,050/=).

**முக்கிய குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| **விண்ணப்பிக்க காலவரையறை** | : | **27.07.2016 மாலை 05.30 வரை** |
| **பொது ஏலத் தேதி** | : | **28.07.2016 காலை 10.00 முதல் மதியம் 1.00 வரை** |
| **குறைந்தபட்ச ஏலத்தொகை** | : | **ரூ.49,550/=** |
| **ஏல அனுபவ உரிம காலம்** | : | **ஆகஸ்ட் மாதம், 2016 முதல் ஜீலை மாதம், 2018** |

**உறுதிப்பிரமாணம்**

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் (1 முதல் 37 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து நிபந்தனைகளுக்கும் (1 முதல் 37 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் விண்ணப்பித்துள்ளேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**இடம் :** ஆர்.வி. நகர். **(கையொப்பம்)**
**தேதி :** 12.07.2016 **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்.**

**ஏல நிபந்தனைகள்**

1. ஏலம் நடத்தப்படும் இணையதளத்தின் முகவரி: www.auctionindia.com, **ஏல நேரம்:** 28.07.2016, **வியாழக்கிழமை** அன்று **காலை** 10.00 மணிக்கு ஆரம்பித்து **மதியம்** 01.00 மணிவரை.

2. பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்கக் கூடாது.

3. புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள தென்னை மரங்களின் பலன்களை இருக்கின்ற நிலையில் அனுபவித்துக்கொள்ள ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் தாங்கள் விண்ணப்பித்துள்ள பயன் தரும் மரங்களின் எண்ணிக்கை மற்றும் தரம் அனைத்தையும் பார்வையிட்டு சரிபார்த்த பின்னரே விண்ணப்பிக்க வேண்டும். மரங்களை பார்வையிடுவதற்கு தோட்டக்கலை அலுவலகத்தில் உள்ள ஊழியர்களுடன் அலுவலக நாட்களில் சென்று பார்வையிடலாம்.

4. ஏலத்தில் பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் இணையதளம் www.auctionindia.com மூலமாக மட்டுமே ( online auction ) பங்குபெறமுடியும்.

5. விண்ணப்ப படிவங்களை வரும் 13.07.2016, **புதன்கிழமை** முதல் புதுவைப் பல்கலைக்கழக இணையதளத்தின் (www.pondiuni.edu.in) மூலமாக (Download செய்து) பெற்றுக்கொள்ளலாம்.

6. ஏலத்தில் பங்கேற்க, இணையதளத்தின் மூலம் பெற்ற படிவத்தை, ஏல நிபந்தனைகளின்படி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு, அத்துடன் விண்ணப்ப படிவத்திற்கான தொகையை, படிவம் ஒன்றுக்கு **"நிதி அதிகாரி, புதுவைப் பல்கலைக்கழகம்"** என்ற பெயரிடப்பட்ட **ரூ.**100/-க்கான வரைவோலையையும் இணைத்து அனுப்பவேண்டும்.

7. மேலும், விண்ணப்பபடிவத்துடன் தற்காலிக காப்பீட்டு தொகை **ரூ.5,000/=** (ருபாய் ஐந்து ஆயிரம்)-க்கான வரைவோலையையும் (Demand Draft), மூடி முத்திரையிட்ட உரையின் (cover) மேல் **"தென்னை மரங்களின் பலன்களை அனுபவித்துக்கொள்ள ஏலம் எடுப்பதற்கான விண்ணப்பம்"** என்று குறிப்பிட்டு தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் சமர்ப்பிக்கும்போது **ஏலத்தில் பங்குபெறுவதற்குண்டான பதிவுப்பெயர் (User name)** மற்றும் **இரகசிய எழுத்து (password)** ஆகியவற்றை ஏலம் விண்ணப்பிக்க கடைசி நாளான 27.07.2016, **புதன்கிழமை** அன்று **மாலை** 5.30 **மணிக்குள்** நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

8. **தபாலிலோ (By post) (அல்லது) கொரியர் (Courier) மூலமாகவோ அனுப்ப விரும்பும் விண்ணப்பதாரர்கள்,** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **"பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம், ஆர்.வி. நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 605014"** என்ற முகவரிக்கு **"தென்னை மரங்களின் பலன்களை அனுபவித்துக்கொள்ள ஏலம் எடுப்பதற்கான விண்ணப்பம்"** என்று அனுப்பும் தபாலின் மூடி முத்திரையிட்ட உரையின் மேல் குறிப்பிட்டு 27.07.2016, **புதன்கிழமை** அன்று **மாலை** 5.30 **மணிக்குள்** வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

**இடம்** :  **(கையொப்பம்)**

**தேதி** :  **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்.**

9. விண்ணப்பத்துடன் மேற்குறிப்பிட்ட தொகைக்கான வரைவோலையை 27.07.2016, **புதன்கிழமை** அன்று **மாலை** 05.30 மணிக்குள் செலுத்தினால் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பித்தவரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைக்கப்படவேண்டும்.

11. விண்ணப்பதாரர் ஏதோ ஒரு காரணத்தினால் பதிவு பெயரையோ (User name) அல்லது இரகசிய எழுத்தையோ (Password) அல்லது இரண்டையும் தவறவிட்டால், முன்வைப்பு தொகைகளை மீண்டும் செலுத்தி வேறொரு பதிவு பெயரையும் (User name) மற்றும் இரகசிய எழுத்தையும் (Password) 27.07.2016, **புதன்கிழமை** அன்று **மாலை** 05.30 மணிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளவேண்டும்.

12. தோட்டக்கலைத்துறை மூலம் பெறப்பட்ட பதிவு பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்தை (Password) தவறவிட்டவர்கள் அவர்களால் பெறப்பட்ட பதிவு பெயர் மற்றும் இரகசிய எழுத்தை வேறொருவர் துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்க **உடனடியாக** தோட்டக்கலைத்துறைக்கு தகவல் தெரிவிக்கவேண்டும்.

13. இணையதளம் மூலம் ஏலத்தில் பங்குபெறுவது குறித்த மாதிரி ஏலத்தினை (Sample auction) www.auctionindia.com என்ற இணையதளத்தின் மூலம் 27.07.2016, **புதன்கிழமை** அன்று மதியம் **02.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை உபயோகப்படுத்தி அறிந்துகொள்ளலாம்.**

14. ஏலத்தில் பங்கு பெற விரும்பும் டெண்டர்தாரர்கள், விண்ணப்பித்தில் குறிப்பிடப்பட்டுள்ள **ஆரம்ப *ஏலத்தொகைக்குமேல்*** (ரூ.49,550/=) மட்டுமே தாங்கள் விரும்பும் ஏலத்தொகையினை குறிப்பிடவேண்டும். ஆரம்ப ஏலத்தொகையைவிட குறைவாக குறிப்பிடப்பட்ட ஏல விண்ணப்பங்கள் கண்டிப்பாக ***நிராகரிக்கப்படும்***.

15. ஏலத்தில் பங்குபெற விரும்பும் டெண்டர்தாரர்கள் ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **ரூ.100/= க்குமேல்** தான் குறிப்பிட முடியும் என்பதைஅறிந்துகொள்ளவும்.

16. மரங்களின் பயன்களை அனுபவிக்கும் உரிம காலம் **ஆகஸ்ட் மாதம்,** 2016 **முதல் ஜீலை மாதம்,** 2018 வரையிலும் வழங்கப்படும். இதற்குறிய உரிம காலக்கெடு முடிவடைந்த பின் டெண்டர்தாரர்களுக்கு பல்கலைக்கழக மரங்களின் பலன்களின் மேல் கண்டிப்பாக எவ்வித உரிமையும் கிடையாது.

17. சென்ற ஆண்டில் டெண்டர் உரிமம் பெற்று அந்த உரிமத் தொகையை இதுவரை செலுத்தாதவர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. கடந்த கால உரிமத் தொகைகளை 10% வட்டியோடு செலுத்திய பிறகே அவர்கள் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

18. ஏலதாரர்களின் (முதல் மூன்று) காப்பீட்டு தொகை பிடித்தம் செய்து வெற்றி பெற்ற முதல் ஏலதாரர் ஏலத்தொகையை செலுத்திய பின்னரே, மற்ற இரண்டு ஏலதாரர்களுக்கு காப்பீட்டு தொகை அளிக்கப்படும்.

19. வெற்றி பெற்ற டெண்டர்தாரரின் காப்பீட்டுத் தொகை (ரூ.5,000/-) விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிம காலமான **ஜீன் மாதம்,** 2018-க்கு பின்னரே திருப்பி அளிக்கப்படும்.

20. விண்ணப்பித்த டெண்டர் படிவங்களின் முடிவுகள் 28.07.2016, **வியாழக்கிழமை** அன்று மாலை 2.30 மணியளவில் பல்கலைக்கழக நிர்வாக கட்டிடத்தில் ஏல பொறுப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அறிவிக்கப்படும்.

**இடம்** : **(கையொப்பம்)**

**தேதி** : **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்.**

**Contd... Pages 3 of 4**

21. டெண்டர்தாரர்கள் பல்கலைக்கழகம் நிர்ணயித்த தொகையை ஏலத்தில் எட்டவில்லையென்றால் பல்கலைக்கழகம் எவ்வித முன்னறிவிப்போ, நிபந்தனையோ இன்றி அன்றோ, வேறு நாளோ மறு ஏலம் நடத்தவோ அல்லது டெண்டர் குழுவின் தீர்மானப்படி முடிவு செய்வதற்கும் பல்கலைக் கழகத்திற்கு முழு உரிமையுண்டு.

22. எந்த காரணமும் கூறாமல் டெண்டரை எற்கவோ, நிராகரிக்கவோ அல்லது இது சம்பந்தமாக வேறு ஆணை பிறப்பிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

23. **வெற்றி பெற்ற டெண்டர்தாரர் ஏலத்திற்குண்டான முழு தொகையினை டெண்டர் முடிவு கிடைக்கப்பெற்ற 03 (மூன்று) வேலை நாட்களுக்குள் மாலை 03.30 மணிக்குள் செலுத்திவிட வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால் எவ்வித முன்னறிவிப்பும், காரணமும் இன்றி அவரின் காப்புத் தொகையை பிடித்தம் செய்து மேலும் அந்த டெண்டர் உரிமத்தை அவருக்கு அடுத்தபடியாக பல்கலைக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப ஏலத்தொகையை விட அதிகமாக குறிப்பிட்டிருக்கும் டெண்டர்தாரருக்கு அளிக்கப்படும்.**

24. ஏலத்தில் வெற்றிபெற்ற டெண்டர்தாரர், ஏலத்தொகையுடன் சேவை வரி இருப்பின் அவற்றையும் சேர்த்துக் கட்டவேண்டும்.

25. ஒப்பந்ததாரர் பல்கலைக்கழகத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும், பொதுக் கட்டுப்பாடு, தனிக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் கட்டுப்பட்டவர் ஆவார்.

26. வெற்றி பெற்ற டெண்டர்தாரர் ஏலத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் வங்கியில் பணம் செலுத்துவதற்கு முன்பாக **<u>தோட்டக்கலைத் துறை அலுவலரிடம்</u>** வங்கி சலானில் ஒப்புதல் கையொப்பம் பெற்ற பின்னரே வங்கியில் பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு ஒப்புதல் கையொப்பம் பெறாமல் தொகை செலுத்தப்பட்டால் அத்தொகை ஏலத்தின் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படாது.

27. ஏலத்தில் வெற்றி பெற்ற டெண்டர்தாரர் மற்றும் அவரின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் உள்ள தென்னை மரங்களின் பலன்களான இளநீர் மற்றும் தேங்காய் ஆகியவற்றை சேகரிக்க **<u>அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் மட்டுமே</u>** (காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை மட்டுமே) பறிக்க அனுமதிக்கப்படும். பல்கலைக்கழக **<u>விடுமுறை நாட்களில் கண்டிப்பாக தேங்காய் மற்றும் இளநீர் பறிக்கக் கூடாது</u>** என்பதை அறியவும்.

28. வெற்றி பெற்ற ஏலதாரர் அவரவர் பகுதிக்குண்டான மரங்களை பராமரிக்கவும் மற்றும் அவற்றின் பலன்களை சேகரிக்கவும் உள்ள நபர்களுக்குண்டான அனுமதி சான்றுகளை தோட்டக்கலை அலுவலகத்தில் பெற்ற பின்னரே பல்கலைகழக வளாகத்தினுள் அனுமதிக்கப்படுவர். பல்கலைகழக வளாகத்தில் அனுமதிக்கப்பட்ட நேரங்களில் அலுவலக/காவல் பணிபுரியும் ஊழியர்கள் கேட்கும் பொழுது காண்பிக்கும் விதமாக எப்பொழுதும் அனுமதி சீட்டை தங்கள் வசம் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும். ஒப்பந்ததாரர் தங்களின் சொந்த செலவில் கண்காணிப்பாளரை அமைத்துக்கொள்ள வேண்டும்.

29. பல்கலைக்கழக தோட்டக்கலை ஊழியர்களோ அல்லது நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்களோ கேட்கும்போது டெண்டர்தாரர் உரிமம் பெற்றதிற்கான பணம் செலுத்திய ஆதார நகலை / அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்.

30. ஒப்பந்ததாரர் ஒப்பந்த தேதி முடியும் வரை அவரது பொறுப்பில் உள்ள மரங்களை நல்ல முறையில் பராமரித்து வரவேண்டும். டெண்டர்தாரர் அவரவர் பகுதிக்குண்டான மரங்களை தீ மற்றும் வேறு விபத்துக்கள் நடக்காமல் கண்காணித்துக் கொள்ள வேண்டும். மரங்கள் பட்டுப்போனாலோ அல்லது மரங்களை வெட்டினாலோ அல்லது வேறு வகையில் உபயோகித்தாலோ அல்லது மரங்களுக்கு எவ்வகையிலாவது சேதம் ஏற்பட்டாலோ அப்பிரிவின் உரிமம் ரத்துசெய்யப்படும் மேலும் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு அப்பிரிவின் ஏலதாரர் பொறுப்பாவார்.

இடம் : **(கையொப்பம்)**

தேதி : **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்.**

**Contd… Pages 4 of 4**

31. உரிம காலத்திலேயே பல்கலைக்கழக கட்டிடங்கள் அமையும் இடங்களில் இருக்கும் மரங்களை வெட்டும் சூழ்நிலை ஏற்பட்டால் பல்கலைக்கழகம் மரங்களை வெட்ட முழு உரிமையுண்டு. இழப்புத் தொகையும் இல்லாது பல்கலைக் கழகத்தின் கட்டுமான பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் எவ்வித தடையோ, இடையூறோ செய்ய உரிமை கிடையாது.

32. பல்கலைக்கழக வளாகத்தின் நிர்வாக கட்டிட பகுதி, J.N. அரங்கம் பகுதி (J.N. Auditorium), குடியிருப்பு பகுதிகள் (**Staff Quarters**), மாணவர் விடுதிகள் (**Students Hostels**), தோட்டக்கலை நாற்றங்கால் பகுதிகளில் (**Horticulture nursery**), தேர்வு துறை **(Examination Wing)** மற்றும் துணை வேந்தர் குடியிருப்பு **(V.C. Residence)** உள்ள பயன் தரும் மரங்கள் பொது ஏலத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்பதை அறியவும். நீக்கப்பட்ட மரங்களின் விவரங்களை தோட்டக்கலை அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

33. பல்கலைக்கழக வளாகத்தில் பாசன வசதியுள்ள இடங்களில் தென்னை மரங்களுக்கு தோட்டகலைத்துறை சார்ந்த மோட்டார் மூலமாக நீர் பாய்ச்சிக் கொள்வதற்கு [1 மணிக்கு ரூ.10/= (ருபாய் பத்து மட்டும்)] வீதம் செலுத்தி சொந்த பொறுப்பில் நீர் பாய்ச்சிக் கொள்ளலாம்.

34. வெற்றிபெற்ற டெண்டர்தாரர் மரங்களின் பலன்களை மட்டுமே அனுபவித்துக் கொள்ளலாம். மரங்களில் இருந்து கள் எடுப்பதற்கோ, பச்சை ஓலைகள் வெட்டுவதற்கோ கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது.

35. தென்னை மரங்களில் குறைந்தபட்சம் 20 மட்டைகள் விடவேண்டும். **மரங்களில் ஓலைகள் வெட்டக்கூடாது.** மரங்களை சுத்தம் செய்யும்போது தோட்டக்கலைத்துறை அலுவலரிடம் அனுமதி பெற்றே சுத்தம் செய்யவேண்டும்.

36. **அனுமதிபெற்று மரங்களில் உள்ள காய்ந்த ஓலைகள்** மற்றும் இதரவற்றை அகற்றும் போதும் தேங்காய் மற்றும் இளநீர் பறிக்கும் போதும் மரங்கள் உள்ள இடத்தினை சுத்தம் செய்யவேண்டும். அவ்வாறு சுத்தம் செய்யாவிடில், அதற்கான தொகையினை டெண்டர்தாரரே ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது இதற்கான செலவுத் தொகையினை டெண்டர்தாரரின் காப்பீட்டுத்தொகையில் பிடித்தம் செய்யப்படும் என்பதை அறியவும்.

37. ஏலம் நடைபெறும் நேரத்தில் மின்வினியோகம் மூலமாகவே அல்லது இதர இயற்கையின் சீற்றத்தினாலோ (Natural Calamity) தடங்கல் ஏற்ப்பட்டால் நிர்வாகம் பொறுப்பேற்க்க முடியாது என்பதை அறியவும்.

**இடம் :** ஆர்.வி. நகர். **பதிவாளர்**
**தேதி :** 12.07.2016 **புதுவைப் பல்கலைக்கழகம்.**

**உறுதிப்பிரமாணம்**

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் (1 முதல் 37 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து நிபந்தனைகளுக்கும் (1 முதல் 37 வரை) நான் முழுவதும் கட்டுப்படுவேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**பெயர் :**

**முகவரி :**

**தொலைபேசி / கைபேசி எண் :**
**இடம் :** **(கையொப்பம்)**
**தேதி :** **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்.**